## அமைச்சர்கள் துரைமுருகன் – மா.சுப்பிரமணியன் பங்கேற்றனர்!

# ரூ.15.69 கோடி மதிப்பில் காட்பாடி அரசு மருத்துவமனை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் திறந்து வைத்தார்!

**சென்னை, அக்.8–**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அவர்கள் நேற்று முன்தினம் (06.10.2025) சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், சேர்காட்டில் ரூ.15.69 கோடி மதிப்பில் 60 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள காட்பாடி அரசு மருத்துவமனையை திறந்து வைத்ததை தொடர்ந்து நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் மருத்துவமனையை பார்வையிட்டனர்.**

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டத்தில் அரசு மருத்துவமனைகள் இல்லாததை கருத்தில் கொண்டு காட்பாடி வட்டத்தில் மக்கள் பயன்பெறும் வகையில்முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அளித்த கோரிக்கையின்படி காட்பாடியில் 60 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனை அமைக்கப்படும் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறைஅமைச்சர்மா.சுப்பிரமணியன் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

காட்பாடி அரசு மருத்துவமனையில் கட்டிட பணிக்கு ரூ.14,30,00,000/- ம், உபகரணங்கள் ரூ.97,82,277/-ம், ஜெனரேட்டர் ரூ.16,00,000/-ம்,தளவாடங்களுக்கு ரூ.17,55,000/-ம், துணிவகைகளுக்கு ரூ.6,49,000/-ம், கணினிகளுக்கு ரூ.2,00,000/-ம் என மொத்தம் ரூ.15,69,86,277/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இப்பணிக்கு 16.12.2022 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு, நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் 10.02.2023 அன்று இப்பணியை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

இம்மருத்துவமனையில் ஆண்கள் பகுதியில் 10 படுக்கைகளும், பெண்கள் பகுதியில் 10 படுக்கைகளும், மகப்பேறு பகுதியில் 12 படுக்கைகளும், குழந்தைகள் பகுதியில் 10 படுக்கைகளும், தொற்றுநோய் பகுதியில் 2 படுக்கைகளும், அவசர சிகிச்சை பிரிவில் 12 படுக்கைகளும், அறுவை சிகிச்சைக்கு முன் மற்றும் பின் கவனிப்பு பகுதியில் 6 படுக்கைகளும் என மொத்தம் 60 படுக்கைகள் வசதிகள் உள்ளன.

இம்மருத்துவமனையில் 6 மருத்துவர்கள், 5 செவிலியர்கள், 1 அலுவலக கண்காணிப்பாளர், 1 இளநிலை உதவியாளர், 1 தட்டச்சரும், ஒப்பந்த அடிப்படையில் 5 செவிலியர்களும், 1 மருந்தாளுநரும், 1 ஆய்வுக்கூட நுட்பநர் (நிலை2), 1 இயன்முறை சிகிச்சையாளர் (நிலை2), 1 மகப்பேறு உதவியாளருக்கு பணி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இம்மருத்துவமனை தரைத்தளம் மற்றும் 2 தளத்துடன் கட்டப்பட்டுள்ளது. தரைத்தளம் 1001.61 சதுர மீட்டர் பரப்பளவில் சிகிச்சை வார்டு, தேர்வு மதிப்பீட்டு அறை, காத்திருப்போர் அறை, புறநோயாளி பிரிவு, வரவேற்பு, பதிவு அறை, ECG/ECHO, பணியகம், தொழில்நுட்பவியலாளர், CT, ஊடுகதிர், அல்ட்ராசவுண்ட் ஸ்கேன், மருத்துவர் அறை, செவிலியர் அறை மற்றும் கழிப்பறை வசதிகளுடனும்,

முதல் தளம் 1001.61 சதுர மீட்டர் பரப்பளவில் ஆய்வகம், காத்திருப்போர் அறை, பெண்கள் ஊசி போடும் அறை, பெண்கள் உடை மாற்றும் அறை, புறநோயாளி, கிடங்கு, மருந்தகம், கழிப்பறை போன்ற வசதிகளுடனும்,

இரண்டாம் தளம் 1001.61 சதுர மீட்டர் பரப்பளவில் 26 படுக்கைகள் கொண்ட மருத்துவ பெண்கள் பிரிவு, செவிலியர் நிலையம், உணவு அறை, மருந்து செமிப்பு, மெத்தை தலையாணிகள் வைப்பறை, 32 படுக்கைகள் கொண்ட மருத்துவ ஆண்கள் பிரிவு மற்றும் கழிப்பறை வசதிகளுடனும், சாய்தள வசதிகளும், போர்டிகோ 39.75 சதுர மீட்டர் பரப்பளவிலும், தலையறை 111.17 சதுர மீட்டர் பரப்பளவிலும் என மொத்தம் 3155.75 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது.

### அமைச்சர் துரைமுருகன் பேச்சு!

நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், அவர்கள் தெரிவித்ததாவது:-

காட்பாடி சட்டமன்றத் தொகுதியில் மக்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தி கொடுத்துள்ளேன். சேர்க்காடு பகுதியை பொருத்தவரை தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி உள்ளதால் ஒரு வளர்ந்து வரும் பகுதியாக உள்ளது. இந்த பகுதியை சுற்றி 25க்கும் மேற்பட்ட கிராம ஊராட்சிகள் உள்ளன. இம்மக்களுக்கு பல்வேறு கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பேன் என தேர்தல் நேரத்தில் வாக்குறுதி அளித்திருந்தேன்.

அதன்படி சேர்க்காட்டில் இளைஞர்களுக்காக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கொண்டு வந்துள்ளேன். இந்த கிராமப்புற பகுதிகளில் உள்ள பொதுமக்கள் ஏதேனும் அவசர சிகிச்சை என்றால் வேலூருக்கோ அல்லது அடுக்கம்பாறைக்கோ கொண்டு செல்ல வேண்டிய நிலை இருந்தது. இதனால் தீவிர சிகிச்சை தேவைப்படும் நபர்கள் பெருமளவு பாதிக்கப்பட்டனர். எனவே இப்பகுதியில் ஒரு நல்ல அரசு மருத்துவமனையை கொண்டு வருவேன் என அறிவித்திருந்தேன். அதன்படி இன்று இந்த மருத்துவமனை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த மருத்துவமனையில் ஸ்கேன் வசதி மற்றும் அறுவை சிகிச்சை வசதிகளும் உள்ளன. மேலும் குழந்தைகளுக்கும், மகப்பேறு சிகிச்சைக்கும் மருத்துவ வசதி ஏற்படுத்தப்படவுள்ளது. தற்பொழுது 60 படுக்கை வசதிகளுடன் உள்ள இந்த மருத்துவமனை 100 படுக்கைகளாக உயர்த்தப்படும். மேலும் மருத்துவமனைக்கான சுற்றுச்சுவரும் விரைவில் அமைக்கப்படும்.

இந்த பகுதியில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் சிப்காட் தொழிற்சாலை விரைவில் தொடங்கப்படவுள்ளது. இதுபோன்ற எண்ணற்ற திட்டங்களை பொதுமக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கில் செயல்படுத்தியுள்ளேன்.



தொடர்ந்து 10 முறையாக என்னை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுத்து என்னை வாழ வைத்து கொண்டிருக்கும் என் தொகுதி மக்களை வாழவைக்க இது போன்ற திட்டங்களை கொண்டு வருவேன். நான் இந்த தொகுதியை கோயிலாகவும், மக்களை தெய்வங்களாகவும் எண்ணி செயல்பட்டு வருகிறேன். காட்பாடி தொகுதியின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து திட்டங்களையும் தொடர்ந்து செயல்படுத்துவேன் என நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், அவர்கள் தெரிவித்தார்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேச்சு

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்கள் கடந்த 4 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மருத்துவ கட்டமைப்பினை மேம்படுத்தி உள்ளார்கள். நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் ஒரு சட்டமன்ற உறுப்பினர் தன் தொகுதிக்கு என்ன திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்பதற்கு மிக சிறந்த உதராணமாக உள்ளார். சட்டமன்றத்தில் என்னை சந்திக்கிற பொழுதெல்லாம் சேர்க்காடு மருத்துவமனை விரைவில் திறக்க வேண்டுமேன வலியுறுத்தி கொண்டே இருப்பார். இந்த மருத்துவமனை ரூ.15.69 கோடி மதிப்பில் மருத்துவ உபகரணங்களுடன் தொடங்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளதால் சாலை விபத்துக்களால் பாதிக்கப்படுவோருக்கும், இப்பகுதியை சுற்றியுள்ள கிராமங்களின் பொதுமக்களுக்கு மகப்பேறு போன்ற முக்கிய சிகிச்சைகளை வழங்கவும் பயன்படும்.

நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் இங்கு விபத்து அவசர சிகிச்சை பிரிவு மற்றும் குழந்தைகள் நல பிரிவு அமைக்கப்படவேண்டுமென தெரிவித்துள்ளார். மேலும் இம்மருத்துவமனையின் பின்புறம் சுற்றுச்சுவர் அமைக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். இந்த கோரிக்கைகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் ஆலோசித்து உடனடியாக நிறைவேற்றப்படும்.

முதலமைச்சர் அவர்கள் இன்று ரூ.173.81 கோடி மதிப்பில் மருத்துவ கட்டிடங்களை திறந்து வைத்து, ரூ.24 கோடி மதிப்பில் தஞ்சாவூர், சேலம் மற்றும் பாளையங்கோட்டை உணவு பகுப்பாய்வு கூடங்களில் அதிநவீன உபகரணங்களின் செயல்பாட்டினை தொடங்கி வைத்து, ரூ.20.15 கோடி மதிப்பில் புதிய மருத்துவ கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு வேலூர் மாவட்டத்தில் மட்டும் ரூ.228.01 கோடி மதிப்பில் பல்வேறு மருத்துவ கட்டிடங்கள் மற்றும் உயர்மருத்துவ கருவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதில் ரூ.5.75 கோடி செலவில் 23 நகர்ப்புற நலவாழ்வு மைய கட்டிடங்கள், ரூ.1.50 கோடி செலவில் 5 துணை சுகாதார நிலைய கட்டிடங்கள், ரூ.13.19 கோடி செலவில் 14 ஆரம்ப சுகாதார நிலையங்களில் புதிய கட்டிடம், வட்டார பொது சுகாதார அலகு, மருத்துவர் மற்றும் செவிலியர் குடியிருப்பு கட்டிடங்கள், ரூ.7.58 கோடி மதிப்பீட்டில் பேர்ணாம்பட்டு அரசு மருத்துவமனை புறநோயாளிகள் பிரிவு கட்டிடம், ரூ.197.81கோடி செலவில் 3,77,264 சதுரடி பரப்பளவில் தரைத்தளம் மற்றும் 7 தளங்களுடன்கூடிய அரசு பென்ட்லேண்ட் மருத்துவமனை வளாகத்தில் சிறப்பு பல்நோக்கு மருத்துவமனை, ரூ.2.18 கோடி செலவில் வேலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் புதிய தீக்காடி சிகிச்சை பிரிவு மற்றும் வைட்டல்ஸ்பே தனிப்பிரிவு திறந்து வைக்கப்பட்டு மக்கள் பயன்பெற்று வருகின்றனர்.

### வேலூர் மாவட்டத்தில் பணிகள் நடைபெறும் கட்டிடங்கள்!

வேலூர் மாவட்டத்தில் ரூ.72.17 கோடி செலவில் 23 புதிய கட்டிடங்கள் பணிகள் நடைபெறுகிறது.

### வேலூர் தொகுதி

ரூ.75 இலட்சம் மதிப்பில் சைதாப்பேட்டை நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம், ரூ.75 இலட்சம் மதிப்பில் தாராப்படவேடு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம், ரூ.75 இலட்சம் மதிப்பில் அலமேலு மங்காபுரம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம், ரூ.1.20 கோடி மதிப்பில் கொணவட்டம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம், ரூ.22 இலட்சம் மதிப்பில் சத்துவாச்சாரி வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம், ரூ.30 இலட்சம் மதிப்பில் சேண்பாக்கம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் ஆகிய பணிகள் நடைபெறுகிறது.

### அணைக்கட்டு தொகுதி

ரூ.20 கோடி மதிப்பில் அணைக்கட்டு அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவு கட்டிடம், ரூ.1.20 கோடி மதிப்பில் ஒட்டேரி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், ரூ.45 இலட்சம் மதிப்பில் ஆசனாம்பட்டு துணை சுகாதார நிலையம், ரூ.30 இலட்சம் மதிப்பில் ஷெரிப் நகர் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், ரூ.45 இலட்சம் காளாம்பட்டு துணை சுகாதார நிலையம், ரூ.45 இலட்சம் மதிப்பில் அக்ஹாரம் துணை சுகாதார நிலையம், ரூ.45 இலட்சம் மதிப்பில் பாக்கம் பாளையம் துணை சுகாதார நிலையம், ரூ.45 இலட்சம் மதிப்பில் வெட்டுவானம் துணை சுகாதார நிலையம் ஆகிய பணிகள் நடைபெற்று வருகிறது.

### குடியாத்தம் தொகுதி

ரூ.40 கோடி மதிப்பில் குடியாத்தம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை கட்டிடம், ரூ.50 இலட்சம் மதிப்பில் கல்லப்பாடிBPHU கட்டிடம், ரூ.45 இலட்சம் மதிப்பில் கூடநகரம் துணை சுகாதார நிலைய கூடுதல் கட்டிடம், ரூ.30 இலட்சம் மதிப்பில் அரிகுவாரப்பள்ளி துணை சுகாதார நிலையம், ரூ.45 இலட்சம் மதிப்பில் மூங்கப்பட்டு துணை சுகாதார நிலையம் ஆகிய பணிகள் நடைபெற்று வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பின்படி 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் வேலூர் மாவட்டத்தில் வேலூர் மாநகராட்சி-20, குடியாத்தம் நகராட்சி-2, பேர்ணாம்பட்டு நகராட்சி-1 என மொத்தம் 23 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் ரூ.5.75 கோடி செலவில் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இதில் முதலமைச்சர் அவர்களால் 06.06.2023 அன்று வேலூர் மாநகராட்சியில்-15, குடியாத்தம் மற்றும் பேர்ணாம்பட்டு ஆகிய நகராட்சிகளில்-3 என்று 18 இடங்களில் திறந்து வைக்கப்பட்டது.

மேலும் 03.07.2025 அன்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் அவர்களால் வேலூர் மாநகராட்சியில் 5 இடங்களில் திறந்து வைக்கப்பட்டது.

சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் முதலமைச்சர் அவர்களால் ரூ.1.20 கோடி மதிப்பில் காட்பாடி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் ரூ.1.20 கோடி மதிப்பில் ஒட்டேரி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதயம் காப்போம் திட்டம் ரூ.3.37 கோடி மதிப்பில் தமிழ்நாடு முழுவதும் இருதய நோயினால் ஏற்படும் உயிரிழப்பினை தடுக்கும் பொருட்டு 27.06.2023 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், மலுமிச்சம்பட்டி ஊராட்சியில் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி தமிழ்நாட்டில் உள்ள 2286 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 8713 துணை சுகாதார நிலையங்களில் இருதய பாதுகாப்பு மருந்துகளான ஆஸ்பிரின்-2, க்ளோபிடோக்ரல்-4,அட்ரோவாஸ்டாட்டின்-8, என மொத்தம்-14 வகையான மாத்திரைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் தமிழ்நாடு அளவில் 40,000 மக்கள் உயிர் பிழைத்துள்ளனர். இன்று காலைகூட கண்ணமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டதில் அங்கு இத்திட்டத்தின்மூலம் 40 நபர்கள் பயனடைந்துள்ளனர். இந்தியாவில் வேறு எந்த ஒரு மாநிலத்திலும் இது போன்ற இருதய பாதுகாப்பு மருந்துகள் ஆரம்ப சுகாதார நிலையங்களிலேயே கிடைக்கும் வசதி இல்லை. தமிழ்நாடு அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதே போன்று அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பாம்புக்கடி மற்றும் நாய்க்கடிக்கு தேவையான மருந்துகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு அனைத்து மருத்துவமனைகளும் தன்னிறைவு பெற்றுள்ளன. குறிப்பாக வேலூர் மாவட்டத்தில் பல்வேறு மருத்துவ கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு மருத்துவத்துறையில் தன்னிறைவு பெற்ற மாவட்டமாக திகழ்கிறது. இம்மாவட்டத்தை இந்த அரசு அடுத்த கட்ட வளர்ச்சியை நோக்கி கொண்டு செல்லும் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் அரசு வேலூர் பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது உள்நோயாளிகள் பிரிவு, மகப்பேறு பிரிவு, ஸ்கேன் அறைகள், பிரசவத்திற்கு பின்னான கவனிப்பு அறை மற்றும் அறுவை சிகிக்சை அறைகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் ஐடிபிஐ வங்கியின் பெரு நிறுவன சமூக பொறுப்பு திட்டத்தில் (CSR) ரூ.20 இலட்சம் மதிப்பில் மொபைல் எக்ஸ்ரே கருவி மற்றும் வாகனத்தை அதன் துணை பொது மேலாளர் ரேவதி ஜெயபாலாஜி அவர்களிடம் மண்டல விற்பனை மேலாளர் சுரேஷ் அவர்களும் வழங்கினார்கள்.

தொடர்ந்து அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் வேலூர் அரசு பென்ட்லேண்ட் பல்நோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையானது குழந்தைகள் மற்றும் மகப்பேறு சிறப்பு மருத்துவமனையாகும். தமிழ்நாட்டில் குழந்தைகள் மற்றும் மகப்பேறு சிறப்பு மருத்துவமனைகளாக சென்னை எழும்பூர் மற்றும் தஞ்சாவூரில் மட்டுமே உள்ளது. வடமாவட்டங்களில் முதல் குழந்தைகள் மற்றும் மகப்பேறு சிறப்பு மருத்துவமனையாக பென்ட்லேண்ட் உயர்சிறப்பு மருத்துவமனை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மருத்துவமனையில் தற்பொழுது 33 மருத்துவர்கள் பணியில் உள்ளனர். மருத்துவர் பற்றாக்குறையோ அல்லது இதர பணியாளர்கள் பற்றாக்குறையோ ஏதும் இம்மருத்துவமனையில் இல்லை என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.இரா. சுப்புலெட்சுமி, வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.கார்த்திகேயன் (வேலூர்), திருமதி வி.அமுலு விஜயன் (குடியாத்தம்), மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் மு.பாபு, வேலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா ஆனந்தகுமார், கூடுதல் இயக்குநர்,மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள் மரு.பி.என்.ரமேஷ் பாபு, காட்பாடி ஒன்றியக்குழுத்தலைவர் வே.வேல்முருகன், மாநகராட்சி துணை மேயர் மா.சுனில்குமார், 1 வது மண்டலக்குழுத்தலைவர் திருமதி புஷ்பலதா வன்னியராஜா, இணை இயக்குநர் (பொ), மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் மரு.தே.ஆக்னஸ்பியூலா உட்பட பலர் கலந்து கொண்டனர்.





விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் காரையில் ரூ13.59 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட புதிய நியாய விலைக் கடையை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து குடும்ப அட்டை தாரர்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கினார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், ஊராட்சி மன்றத் தலைவர் கலையரசி வெங்கடேசன் ஆகியோர் உள்ளனர்.



திருப்பத்தூர் வட்டாரம், மண்டல நாயனகுண்டா, தோக்கியம் ஊராட்சிக்களுக்கான “உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி க.சிவசௌந்தரவள்ளி தலைமையில் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் டி.அசோக்குமார், கே.முருகேசன், ஏ.சி.சுரேஷ்குமார், திருமதி.திருமுருகன் மற்றும் அரசு துறை அதிகாரிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.